
என் இருதயம்
தொய்ந்து போகும்
போதெல்லாம்

61. சங்கீதம்

என் இருதயம் தொய்ந்து போகும் போதெல்லாம்
பூமியின் கடையாந்தரத்திலிருந்தும்மை கூப்பிடுவேன்
எனக்கு எட்டாத உயரமான கன்மலையில்
என்னை நீர் கொண்டு போய் சேர்த்திடும்

நீர் எனக்கு அடைக்கலமும்
சத்துருக்கு எதிரே பலத்த துருகமும்

நான் உம்முடைய கூடாரத்தில் தங்கிடுவேன்
உமது செட்டைகளின் மறைவிலே வந்து அடைந்திடுவேன்

நீர் எனது பொருத்தனைகளைக் கேட்டீரே
உமக்கு பயந்தவர்களின் சுதந்திரத்தை எனக்கு தந்தீரே

ராஜாவின் நாட்களோடே நாட்களைக் கூட்டுவீர்
அவர் வருஷங்கள் பாரம்பரியமாக இருக்குதே
அவர் தேவனுக்கு முன்பாக என்றைக்குமே நிலைத்திருப்பார்
கிருபையும் உண்மையும் அவரைக் காக்க கட்டளையிடும்

KJC-DNN

